இன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை NETS (National Evaluation & Testing Service) என்ற வகையில் பாடசாலைப் பரீட்சைகளுடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் முகவர் நிறுவனங்கள் (Agency Functions) என்றவாறு இரு பிரிவுகளில் பணியாற்றுகிறது.

இவ்விரு நிறுவனங்களுக்கும் உரிய பணிகள் பிரதானமாக மூன்று பிரிவுகளாகச் செயற்படுகின்றன.

01. பாடசாலைப் பரீட்சைகளுடன் தொடர்புடைய சேவைகள
02. முகவர் நிறுவனங்களின் சேவைகள் (Agency Functions)
03. பொதுச் சேவைகள (Common Functions)

01. பாடசாலை பரீட்சைகளுடன் தொடர்புடைய சேவைகளை வழங்கும் கிளைகள்

1.1 பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு மற்றும் பெறுபேற்றுக் கிளை
1.2 இரகசிய (பாடசாலைப் பரீட்சைகள்) கிளை
1.3 மதிப்பீட்டு (பாடசாலைப் பரீட்சைகள்) கிளை
1.4 புலன் விசாரணைக் கிளை
1.5 சான்றிதழ் கிளை
1.6 ஆய்வு மற்றும் அபிவிருத்தி கிளை

02. முகவர் நிறுவன பரீட்சைகளுடன் தொடர்புடைய சேவைகளை வழங்கும் கிளைகள

2.1 ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை
2.2 இரகசிய கிளை
2.3 மதிப்பீட்டு கிளை
2.4 பெறுபேற்று கிளை

03. பொது சேவைகளுடன் (Common Functions) தொடர்புடைய கிளைகள

3.1 நிருவாகக் கிளை
3.2 தபாற் கிளை
3.3 கணக்கீட்டுக் கிளை
3.4 விநியோகக் கிளை
3.5 அச்சகம்
3.6 கணினிக் கிளை
3.7 தரவு நிரற்படுத்தும் கிளை
3.8 திட்டமிடல் மற்றும் கண்காணிப்புக் கிளை

02. குறித்த பிரிவுகளின் செயலடைவு

பாடசாலை பரீட்சைகளுடன் தொடர்புடைய சேவைகள்

2.1 பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு மற்றும் பெறுபேற்றுக் கிளை

பாடசாலைப் பரீட்சைகளுக்கான இக்கிளையின் வருடாந்த வேலைத்திட்டத்திற்கமைய 2013.01.01 முதல் 2013.12.31 வரை ஒழுங்கமைத்து நடாத்தப்பட்ட பாடசாலைப் பரீட்சைகள் மற்றும் பாடசாலை அமைப்பின் வேறு பரீட்சைகள் தொடர்பான தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

பரீட்சை	பரீட்சை நிலையங்களின் எண்ணிக்கை	பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை	பரீட்சை நடாத்தப்பட்ட காலப்பகுதி	பெறுபேறுகள் வெளியிடப்பட்ட திகதி	பரீட்சை நிர்வாகப் பணிகளில் பங்குபற்றியோரின் எண்ணிக்கை
க.பொ.த (உ.த)ப் பரீட்சை - 2013 (புதிய பாடத்திட்டம்)	1,990	280,560	2013.08.05 2013.08.31	2013.12.20	4,566
க.பொ.த (உ.த)ப் பரீட்சை - 2013 (பழைய பாடத்திட்டம்)	174	12,146	2013.08.05 2013.08.31	2013.12.20	672
க.பொ.த (சா.த)ப் பரீட்சை - 2013	4,300	578,140	2013.12.10 2013.12.20	2014.04.03	9,668
பொதுத் தகவல் தொழினுட்பப் பரீட்சை 2013	1,114	137,842	2013.10.27	2014.02.06	2,710
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013	2,836	329,725	2013.08.25	2013.10.01	6,664
ஆசிரியர் கல்லூரி பட்டதாரிகள் அல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பாட - நெறி 2011(2012) பரீட்சையின் செய்முறைப் பரீட்சை மட்டும் இவ்வருடத்தில் நடாத்தப்பட்டது.	15	2,459	2013.03.11 2013.03.18	2013.05.09	256
பட்டமேற் கல்வி டிப்ளோமா (உள்வாரி) முழுநேர பாடநெறிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சை - 2013	07	981	2013.10.12	2013.12.12	77

பரீட்சை	பரீட்சை நிலையங்களின் எண்ணிக்கை	பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை	பரீட்சை நடாத்தப்பட்ட காலப்பகுதி	பெறுபேறுகள் வெளியிடப்பட்ட திகதி	பரீட்சை நிர்வாகப் பணிகளில் பங்குபற்றியோரின் எண்ணிக்கை
கற்பித்தலில் தேசிய டிப்ளோமா வெளிவாரி இறுதிப் பரீட்சை - 2012(2013)	25	3,062	2013.04.01 2013.04.07	2013.09.13	273
கல்வியியற் கல்லூரிகளுக்கான கற்பித்தலில் தேய டிப்ளோமா ஆங்கிலம் மற்றும் தகவல் தொழினுட்பப் பாடநெறிக்கு தெரிவு செய்வதற்கான	59	19,118	2013.06.22	2013.08.15	561
சீத்தாவாக்கபுர பிரிவெனா ஆசிரியர்களுக்கான இறுதிப் பரீட்சை 2012 (2013)	01	34	2013.03.18 2013.03.23	2014.01.29	03

மூலம் : பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு மற்றும் பெறுபேற்றுக் கிளை

2.2 இரகசிய (பாடசாலைப் பரீட்சைகள்) கிளை

2013 ஆம் ஆண்டில் பின்வரும் பரீட்சைகளுடன் தொடர்புடைய வகையில் இக்கிளைக்குரிய பணிகளான பரீட்சகர்களின் குழுக்களை நியமிப்பது முதல் இணைப்பு அதிகாரிகள் ∴ பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு வினாத்தாள்களை வழங்குதலும் குறித்த சந்தர்ப்பங்களில் விடைத்தாள்கள், எஞ்சிய வினாத்தாள்கள் மற்றும் காகிதாதிகளை திணைக்களத்திற்கு மீளப் பெற்றுக்கொள்ளல் வரையான அனைத்து பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

01	க.பொ.த (உ∴த)ப் பரீட்சை - புதிய பாடத்திட்டம்
02	க.பொ.த (உ∴த)ப் பரீட்சை - பழைய பாடத்திட்டம்
03	தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை
04	க.பொ.த (.சா∴த)ப் பரீட்சை
05	ஆசிரியர் கல்லூரி இறுதி (புதிய , பழைய)ப் பரீட்சை
06	றுபட்டதாரிகளல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பாடநெறியின் இறுதிப் பரீட்சை
07	பொதுத் தகவல் தொழினுட்பப் (GIT) பரீட்சை
08	கல்வியியற் கல்லூரிக்குப் பயிலுனர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சை - தகவல் தொழினுட்பம் மற்றும் ஆங்கிலப் பாடநெறிக்காக
09	பல்கலைக்கழகங்களில் கல்விப் பீடங்களின் பட்டமேற் கல்வி டிப்ளோமா பாடநெறிக்கு பயிலுனர்களைத் தெரிவுசெய்வதற்கான பரீட்சை
10	கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பரீட்சை - (புதிய, பழைய பாடத்திட்டம்)

மூலம் : இரகசிய (பாடசாலைப் பரீட்சைகள்) கிளை

2.3 மதிப்பீட்டு (பாடசாலைப் பரீட்சைகள்)கிளை

அனைத்து பாடசாலை பரீட்சைகளினதும் விடைத்தாள்களை சரியாகவும் இரகசியத் தன்மை பாதுகாக்கப்படும் வகையிலும் மதிப்பீடு செய்தல் இக்கிளையின் பிரதான பணியாகும். குறித்த தினத்தில் வினைத்திறனானதும் சரியானதுமான மதிப்பீட்டுப் பணிகளைச் செய்வதற்காக பரீட்சகர்களை அறிவுறுத்தல், மதிப்பீட்டுப் பணிகளை நிறைவு செய்தல் என்பன இக்கிளையினால் மேற்கொள்ளப்படுகிறது.

2013ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைகளின் மதிப்பீட்டு பணிகள் தொடர்பான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

வருடம	பரீட்சை	மதிப்பீட்டு குழுக்களின் எண்ணிக்கை			மதிப்பீடு நடைபெற்ற காலம்	மதிப்பீட்டில் பங்குபற்றிய பரீட்சகர்களின் எண்ணிக்கை
		சிங்களம்	தமிழ்	ஆங்கிலம்ள		
2012	க.பொ.த.(சா.தர)ப் பரீட்சை				2012.12.30 - 2013.01.08	28,200
	I ஆம் கட்டம்	1,048	401	307		
2012	க.பொ.த.(சா.தர)ப் பரீட்சை				2013.01.15 - 2013.01.24	3,536
	II ஆம் கட்டம்	122	83	16		
2013	கற்பித்தலில் தேசிய டிப்ளோமா இறுதிப் பரீட்சை	27	05	13	2013.04.23 - 2013.07.31	430
	கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடநெறிக்கான ஆட்சேர்ப்பு பரீட்சை	03	-	09	2013.07.02 - 2013.07.18	115
2013	க.பொ.த.(உ.தர)ப் பரீட்சை					
	I ஆம் கட்டம் (புதிய பாடத்திட்டம்)	219	41	14	2013.08.27 - 2013.09.09	4,650
	க.பொ.த.(உ.தர)ப் பரீட்சை					
	II ஆம் ட்டம் (புதிய பாடத்திட்டம்)	126	31	108	2013.09.03 - 2013.09.16	4,240
	க.பொ.த.(உ.தர)ப் பரீட்சை					
	III ஆம் கட்டம்					
	புதிய	162	58	08	2013.09.18 - 2013.09.29	4,672
	பழையள	23	35	06		
2013	தரம் 5 புலமைப்பரிசிப் பரீட்சை	242	78	-	2013.08.30 - 2013.09.09	5,760
2011/ 2012	ஆசிரியர் கல்லூரி இறுதிப் பரீட்சை					
	II ஆம் வருடம்	14	-	4		
	தனிப்பட்ட					500

வருடம	பரீட்சை	மதிப்பீட்டு குழுக்களின் எண்ணிக்கை			மதிப்பீடு நடைபெற்ற காலம்	மதிப்பீட்டில் பங்குபற்றிய பரீட்சகர்களின் எண்ணிக்கை
		சிங்களம	தமிழ்	ஆங்கிலம்ள		
2012	பொதுத் தகவல் தொழினுட்பப் பரீட்சை	41	12	05	2013.02.13 - 2013.02.22	1,040
2013	பொதுத் தகவல் தொழினுட்பப் பரீட்சை	50	16	07	2013.11.12 - 2013.11.19	1,314
	மீள் பரிசீலனை	பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை				
2012	க.பொ.த.(சா.்.தர)ப் பரீட்சை	80,668			2013.06.27 - 2013.07.20	800
2012	க.பொ.த.(உ.தர)ப் பரீட்சை	52,000			2013.03.19 - 2013.04.23	650
2013	தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் மேன்முறையீடுகளைப் பரீட்சித்தல்	15,621			2013.11.25 - 2013.12.10	199

மூலம் : மதிப்பீட்டு (பாடசாலைப் பரீட்சைகள்) கிளை

2.4 புலன்விசாரணைக் கிளை

எவ்வித பாகுபாடுமின்றி பரீட்சார்த்திகளுக்கு நியாயம் கிடைக்கும் வகையில் பரீட்சைகளை நடாத்துதல் பரீட்சைத் திணைக்களத்தின் அடிப்படைக் குறிக்கோள் என்பதுடன் பொறுப்புமாகும். பரீட்சை சட்டதிட்டங்கள் மீறப்படும் வகையில் பரீட்சார்த்திகள் வஞ்சகமான மோசடியான செயல்களில் ஈடுபடல் மற்றும் பரீட்சைப் பணிக் குழுவினரால் செய்யப்படுகின்ற முறைகேடுகளை புலன்விசாரணைக்கு உட்படுத்தி உரிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக கருமமாற்றல் இக்கிளையின் பிரதான பொறுப்பாகும். பரீட்சை மோசடிகள் / முறைகேடுகள் தொடர்பான அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் அது தொடர்பாக நடவடிக்கைகளை வினைத்திறனாக்குதல் இக்கிளையின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

பரீட்சை	பதிவுசெய்யப்பட்ட மோசடிகளின் எண்ணிக்கை	தண்டனை வழங்கப்பட்டவற்றின் எண்ணிக்கை	வெளியிடப்பட்ட பெறுபேறுகளின் எண்ணிக்கை	இன்னமும் புலன்விசாரணை நடைபெறுகின்ற அல்லது நிறைவுபெறாதவற்றின் எண்ணிக்கை
தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை - 2013	86	-	86	-
க.பொ.த.(சா/தர)ப் பரீட்சை - 2012	1,040	120	917	03
க.பொ.த.(உ.தர)ப் பரீட்சை - 2013	1,568	22	1,542	04

பரீட்சை	பதிவுசெய்-யப்பட்ட மோசடிக-ளின் எண்ணி-க்கை	தண்டனை வழங்கப்பட-்டவற்றின் எண்ணிக-்கை	வெளியிட-ப்பட்ட பெறுபேறுக-ளின் எண்ணிக-கை	இன்னமும் புலன்விசாரணை நடைபெறுகின்ற அல்லது நிறைவுபெறா-தவற்றின் எண்ணிக்கை
நிறுவனம்சார் பரீட்சைகள் (வருடம் முழுவதும் நடாத்தப்பட்ட நிறுவனம்சார் பரீட்சைக் கிளைக்குரிய பரீட்சைகள்)	5,631	320	5,311	-

2013 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளுக்காக வழங்கப்பட்ட பதிலிறுத்தல்கள்	08
பரீட்சை நிலையங்களிலும் மதிப்பீட்டு நிலையங்களிலும் உத்யோகத்தர்களால் செய்யப்பட்ட பல்வேறு தவறுகள் மற்றும் முறைகேடுகள் காரணமாக பரீட்சைக் கடமைகள் தடைசெய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	92
பரீட்சை நிலையங்களில் செய்யப்பட்ட தவறுகள் காரணமாக பரீட்சைத் தடை விதிக்கப்பட்ட பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை	06

நிர்வாகப் பணிகள் தொடர்பாக ஆணையாளராலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினராலும் புலன்விசாரணை செய்யப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக கோவைகள் ஆரம்பித்தல், உரிய கிளையுடன் தொடர்புகொண்டு பதில் அறிக்கைகளைத் தயார்செய்தல் மற்றும் தேவையானவாறு துணை ஆவணங்களை சட்டமா அதிபரினூடாக நீதிமன்றத்திற்குச் சமர்ப்பித்தல், சட்டமா அதிபரிடமிருந்து எழுத்து மூல அல்லது வாய்மொழி மூல ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் நீதிமன்ற அறிவித்தலுக்கமைய உரிய தினங்களில் உத்தியோகத்தர்கள் நீதிமன்றத்தில் பிரசன்னமாயிருத்தல் ஆகிய அனைத்து கருமங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மூலம்: புலன்விசாரணைக் கிளை

2.5 சான்றிதழ் கிளை

	பணிகளின் விபரம்	அலகு ஒன்றின் பெறுமதி (ரூபா)	அலகுகள	வருமானம் (ரூபா)a
01	ஒரு நாள் சேவை மூலம் வெளிநாட்டு தேவைகளுக்கான சான்றிதழ்களை விநியோகித்தல் - மேலதிக பிரதி ஒன்றுக்கு - - சுட்டெண் தேடுதல் -	500.00 200.00 100.00	50,619 12,808 3,923	2,53,09,500.00 25,61,600.00 3,92,300.00
02	சாதாரண சேவை மூலம் வெளிநாட்டு தேவைகளுக்கான சான்றிதழ்களை விநியோகித்தல் - மேலதிக பிரதி ஒன்றுக்கு - - சுட்டெண் தேடுதல் -	250.00 150.00 100.00	1,652 177 23	413000.00 26550.00 2300.00
03	தபாலில் இடுதல்	250.00	180	45,000.00
04	உள்நாட்டிற்கு துணைப் பிரதி வழங்கல்	100.00		
05	பரீட்சைப் பெறுபேறுகளை உறுதிப்படுத்தல் (அரச திணைக்களங்கள், அரச நிருவாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள், பொலிஸ், இராணுவ, சுகாதார, கல்வி ஆகிய அமைச்சுக்களைச் சேர்ந்த சகல நிறுவனங்களுக்கும்)		70,658	அரசாங்க நிறுவனங்க-ளிடமிருந்து கட்டணம் அறவிடப்படு-வதில்லை.
	வங்கி, கூட்டுத்தாபனம், சபை, அதிகார சபை மற்றும் தனியார் நிறுவனங்களிற்காக பெறுபேறுகளை உறுதிப்படுத்தல், தண்டப்பணம் அறவிடல்)ஆகியவற்றின் மூலம் கிடைத்த பணம்		14,450	14,45,000.00
06	ஆசிரிய கலாசாலை சான்றிதழ்கள் - சிங்களம் - தமிழ்		163 25	கட்டணம் அறவிடப்ப-டுவதில்லை
07	அல் ஆலிம் சான்றிதழ்கள்		28	
08	பிரின்செட் சான்றிதழ்கள்		15	
09	தொழில்நுட்ப கல்லூரிச் சான்றிதழ்கள்		21	
10	ஆரம்ப பிரிவெனா சான்றிதழ் (துணைப் பிரதி)		150	
11	பௌத்த தர்மாச்சார்ய சான்றிதழ்கள்		3,632	
12	தேசிய நடன / சங்கீத சான்றிதழ்கள்		40	
13	மேலைத்தேய சங்கீத சான்றிதழ்கள்		20	

மூலம் : சான்றிதழ் கிளை

2.6 ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கிளை

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பாடசாலைப் பரீட்சைகளுடன் தொடர்புடைய சகல பரீட்சைகளினதும் பண்புத்தரத்தை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான தரவுகளைச் சேகரித்தலும், வினாத்தாள்களையும் பெறுபேறுகளையும் பகுப்பாய்வு செய்தலும், வினாத்தாள் தயாரித்தலில் ஈடுபடுகின்றவர்களையும் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடுகின்றவர்களையும் அறிவுறுத்தலும் இக்கிளையின் பிரதான பணிகளாகும். அதேபோன்று பாடசாலை மட்ட கணிப்பீட்டு செயன்முறையுடன் தொடர்பான இறுதிப் புள்ளிகளைப் பாடசாலைகளிலிருந்து பெற்றுக்கொள்ளலும் இக்கிளையின் பணியாகும். வினாத்தாள் பகுத்தாய்வின் மூலம் பெற்றுக்கொண்ட தகவல்களின் துணையுடன் பரீட்சார்த்திகள் குறைந்த அடைவு மட்டத்தைக் காட்டும் பாடத் துறைகளை இனங்கண்டு அவை தொடர்பாக அவற்றுடன் தொடர்புடைய பகுதியினரை அறிவுறுத்தல் இக்கிளை மூலம் செய்யப்படுகின்ற மற்றுமொரு முக்கிய பணியாகும்.

ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கிளை மூலம் 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு.

01. க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை – 2012 இன் பரீட்சைப் பெறுபேறுகளையும் வினாத்தாள்களையும் பகுப்பாய்வு செய்து அத்தகவல்களை உரிய சகல தரப்பினருக்கும் வழங்கி அது தொடர்பான தேசிய மட்ட கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டு அறிவுறுத்தப்பட்டது. அதன்போது மாணவர்கள் இடர்படும் பாடத் துறைகளை இனங்கண்டு அது தொடர்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. அது தொடர்பான அறிக்கை அமைச்சரவைக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

02. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை – 2012, 2013 ஆகியவற்றின் வினாத்தாள்களைப் பகுப்பாய்வு செய்து மாணவர்கள் இடர்படும் பாடத்துறைகளை இனங்கண்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

03. க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை – 2012, க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை – 2012 மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை – 2012 ஆகியன தொடர்பான பாடசாலை அடைவுச் சுட்டிகள் தயாரிக்கப்பட்டு அவை பற்றி அனைத்து கல்வி தொடர்பாக அதிகாரமுள்ளவர்களும் அறகூறுத்தப்பட்டுள்ளனர். இதன் மூலம் சகல பாடசாலைகளினதும் அடைவு மட்டங்கள் பற்றிய தகவல்களை அறியக் கூடியதாக உள்ளது.

04. மதிப்பீட்டு அறிக்கைள் தயாரித்தல் :
க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை – 2011 இற்குரிய 12 பாடங்கள் தொடர்பான, மதிப்பீட்டு அறிக்கைகள் தயாரிகப்பட்டு பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டதுடன், திணைக்களத்தின் இணையத்தளத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. குறித்த பாடவினாத்தாள்களுக்கு மாணவர்கள் விடையளித்துள்ள விதம் பகுப்பாய்வு செய்யப்பட்டு, வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ள விதம், மாணவர்கள் ஒவ்வொரு வினாவிற்கும் புள்ளிகள் பெற்றுள்ள விதம் ஆகியனவும், வினாப் பகுதிகள் / உப பகுதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் இலகுச்சுட்டியும் கணித்துக் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிற்குமுரிய விடைகளும், விடை எழுதும்போது பரீட்சார்த்திகள் வெளிக்காட்டிய பலவீனங்களும் அவற்றுக்கான தீர்வுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. அதேபோன்று க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை – 2012 இற்குரிய 11 பாடங்களின் மதிப்பீட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அச்சிடலுக்த் தயார்நிலையில் உள்ளதுடன் க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை – 2012 இற்குரிய 07 பாடங்களின் மதிப்பீட்டு அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டு அச்சிடலுக்கு தயார் நிலையில் உள்ளன.

05. மதிப்பீட்டு அறிக்கைகளைக் கையாளும் முறை மற்றும் மாணவர் அடைவை மேம்படுத்துவதற்கு அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும் முறை தொடர்பாக கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களுக்காக நாடளாவிய ரீதியில் பாடத்துக்குப் பொறுப்பான அனைத்து பணிப்பாளர்களுக்கும் ஆசிரிய ஆலோசகர்களுக்கும் (தமிழ், சிங்கள மொழி மூல) அறிவூட்டற் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

06. உருப்படி துலங்கல் கோட்பாட்டைப் (Item Response Theory) பயன்படுத்தி க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை – 2012, க.பொ.த. (சா/தர)ப் பரீட்சை 2012 ஆகியவற்றின் வினாத்தாள்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு பிரதான கட்டுப்பாட்டுப் பரீட்சகர்களுக்கான அறிக்கைகள் வழங்கப்பட்டு அவை தொடர்பாக அவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

07. க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை – 2013 இற்கான வழிகாட்டல் கருத்தரங்குகளுக்கான வினாத்தாள்களையும் அவற்றுக்கான விடைகளையும் தயாரித்து பாடசாலைகளுக்கு அனுப்புவதற்காக கல்வி அமைச்சுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

08. 1994 முதல் 2014 வரையான க.பொ.த. (சா/தர)ப் பரீட்சைகளின் பெறுபேற்றுப் பகுப்பாய்வுகள் உள்ளடங்கிய புள்ளிவிபரக் கையேடு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

09. வினாக்கள் தயாரித்தல் தொடர்பாக இலங்கை கடற்படை அதிகாரிகளை அறிவூட்டுவதற்கான செயலமர்வொன்று நடாத்தப்பட்டது.

10. க.பொ.த. (சா/தரம்) – 2013 மற்றும் க.பொ.த. (உ/தரம்) – 2013 ஆகியவற்றின் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுக்கு அவசியமான விபரப்புள்ளிப் படிவம், இறுதிப் புள்ளிப்படிவம் என்பவற்றைப் பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் மற்றும் அவற்றைப் பகிர்ந்தளித்தல் தொடர்பான செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

மூலம் : ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கிளை

முகவர் நிறுவன சேவைகள் (Agency Functions)

2.7 ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை

பாடசாலைப் பரீட்சைகள் தவிர்ந்த தேசியமட்ட ஆட்சேர்ப்பு பரீட்சைகள், சான்றிதழ் பரீட்சைகள் வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சைகள், பதவி உயர்த்தல் பரீட்சைகள் மற்றும் ஏனைய பரீட்சைகளையும், வெளிநாட்டுப் பரீட்சைகளையும் ஒழுங்குசெய்து நடாத்துதல் தொடர்பான பணிகள் இக்கிளை மூலம் நடைபெறுகின்றன.

வருடாந்த வேலைத்திட்டத்திற்கு ஏற்ப 01.01.2013 தொடக்கம் 31.12.2013 வரையான காலப்பகுதியில் ஒழுங்கமைத்து நடாத்தப்பட்ட பரீட்சைகள் தொடர்பான தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

நடாத்தப்பட்ட பரீட்சை வகைகள்	நடாத்தப்-பட்ட பரீட்சைக-ளின் எண்ணிக்-கை	தோற்றிய பரீட்சார்த்-திகளின் எண்ணிக-கை	வருமானம் (ரூபா)	பரீட்சை நிர்வாக கடமைக-ளில் ஈடுபடுத்த-ப்பட்டோ-ரின் எண்ணிக்-கை
ஆட்சேர்க்கும் பரீட்சைகள்	40	336,343	172,684,569.00	28,214
சான்றிதழ் பரீட்சைகள்	14	138,224	8,722,703.00	11,920
வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சைகள்	39	22,957	5,223,811.00	1,891
பதவி உயர்த்தும் பரீட்சைகள்	13	6,235	2,928,483.00	518
வெளிநாட்டுப் பரீட்சைகள்	17	8,485	16,126,047.00	471
வேறு பரீட்சைகள்	09	128,928	25,483,259.00	9,111
மொத்தம்	132	641,172	231,168,872.00	52,125

மூலம் : ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை

2.8 இரகசிய (நிறுவனம்சார் பரீட்சை)க் கிளை

நடாத்தப்பட்ட பரீட்சை வகை	நடாத்தப்பட்ட பரீட்சைகளின் எண்ணிக்கை	பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை	தயாரிக்கப்பட்ட வினாத்தாள்களின் எண்ணிக்கை (மொழி ரீதியாக)				அச்சுப்பதிக்கப்பட்ட வினாத்தாள்களின் எண்ணிக்கை (மொழி ரீதியாக)			
			சிங்களம்	தமிழ்	ஆங்கிலம்	மொத்தம்	சிங்களம்	தமிழ்	ஆங்கிலம்	மொத்தம
ஆட்சேரப்பு பரீட்சைகள்	39	335,830	84	84	66	234	303,888	33,376	3,716	340,980
சான்றிதழ் பரீட்சைகள்	14	177,595	102	64	93	259	160,624	16,893	1,278	178,795
வினைத்திறன் தடைத்தாண்டல் பரீட்சைகள்	38	25,649	103	87	89	279	22,602	5,575	1,372	29,549
பதவி உயர்த்தல் பரீட்சைகள்	13	6,204	53	50	42	145	5,974	1,380	450	7,804
வெளிநாட்டு பரீட்சைகள்	20	33,911	19	13	122	154	802	150	34,159	35,111
களனி பல்கலைக்கழகப் பரீட்சைகள்	3	34,113	2	0	0	2	0	0	0	0
மொத்தம்	127	613,302	363	298	412	1,073	493,890	57,374	40,975	592,239

மூலம் : இரகசிய (நிறுவனம்சார் பரீட்சை)க் கிளை

2.9 மதிப்பீட்டு (நிறுவனம்சார் பரீட்சைகள்)க் கிளை

2013 ஆம் ஆண்டின் செயற்பாட்டு வேலைத்திட்டத்திற்கு அமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைகளின் மதிப்பீட்டுப் பணிகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

பரீட்சை வகை	பரீட்சைக-ளின் எண்ணிக்கை	விடைத்தா-ள்களின் எண்ணிக்கை	மதிப்பீட்டில் ஈடுபடுத்தப்பட்ட பரீட்சகர்களின் எண்ணிக்கை
ஆட்சேரத்தல் பரீட்சைகள்	41	605,214	3,800
பதவி உயர்த்தல் பரீட்சைகள்	11	50,613	110
சான்றிதழ்ப் பரீட்சைகள்	12	507,759	2,450
வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகள்	28	82,499	155
வேறு பரீட்சைகள் (வெளிநாட்டுப் பரீட்சைகள் உட்பட)	21	243,108	100
மொத்தம்	113	1,489,193	6,615

மூலம்: மதிப்பீட்டு (நிறுவனம்சார் பரீட்சைகள்)க் கிளை

2.10 பெறுபேற்று (நிர்வாகப் பரீட்சை)க் கிளை

பரீட்சை வகைகள்	பரீட்சைகளின் எண்ணிக்கை (2013)	பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை (2012 + 2013)	பெறுபேறுகள் வெளியிடப்பட்ட பரீட்சைகளின் எண்ணிக்கை (2012 + 2013)
ஆட்சேர்த்தல் பரீட்சைகள்	41	242,660	42
பதவி உயர்த்தல் பரீட்சைகள்	12	17,171	15
சான்றிதழ் பரீட்சைகள்	14	160,993	15
வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகள்	38	21,344	36
வேறு பரீட்சைகள்	02	5,115	02
மொத்தம்	107	447,283	110

* 2013 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைகளின் எண்ணிக்கை மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

** 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட போதிலும் பெறுபேறுகளை வெளியிட முடியாதுபோன மற்றும் 2013 ஆம் ஆண்டில் நடாத்தி பெறுபேறுகளை வெளியிட முடிந்ததுமான பரீட்சைகளின் மொத்த எண்ணிக்கை காட்டப்பட்டுள்ளது.

மூலம் : பெறுபேற்று (நிறுவனம்சார் பரீட்சைகள்)க் கிளை

பொதுச் சேவைகள

2.11 நிருவாகக் கிளை

திணைக்களத்தின் பொது நிருவாகம், நிருவாகப் பணிகள் மற்றும் ஒழுங்காற்றுப் பணிகளை நடைமுறைப்படுத்தல் நிர்வாகக் கிளையின் பணியாகும். அதிகாரிகள், பணியாளர்களை ஆட்சேர்த்தல், பணியில் ஈடுபடுத்தல், இடமாற்றம், ஓய்வு பெறச் செய்தல் என்பன அவற்றுள் அடங்கும். திணைக்களத்தின் பாதுகாப்பு பணிகளை முன்னெடுத்தலும் பராமரிப்பு மற்றும் சேவைகளை மேற்பார்வை செய்தலும கட்டுப்படுத்தலும் நிருவாகக் கிளையினால் மேற்கொள்ளப்படும் ஏனைய பணிகளாகும்.

2013ஆம் ஆண்டில் இலங்கை கல்வி நிருவாகச் சேவையில் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை மூலமான ஆட்சேர்ப்பின் கீழ் 14 அதிகாரிகளையும் திறந்த போட்டிப் பரீட்சை மூலமான ஆட்சேர்ப்பின் மூலம் 04 அதிகாரிகளையும் இத்திணைக்களத்திற்கு இணைத்துக்கொள்ள முடிந்ததுடன் அதன்மூலம் பரீட்சைகள் ஒழுங்கமைப்புப் பணிகள், பரீட்சைகளை நடாத்துதல், மதிப்பீடு மற்றும் பெறுபேறுகளை வெளியிடல், என்பவற்றை மிக வினைத்திறனான முறையிலும் சரியாகவும் மேற்கொள்ள முடிந்துள்ளது.

மூலம் : நிருவாகக் கிளை

2.12 தபாற் கிளை

பணிகள்a	தொகை
கிடைக்கப்பெற்ற சாதாரண கடிதங்கள்	134,203
கிடைக்கப்பெற்ற பதிவுத் தபால்கள்	4,52,121
இக்கிளையினால் தபால் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள சாதாரண கடிதங்கள்	459,090
சாதாரண கடிதங்களை தபாலில் இடுவதற்காக செலவான தொகை (ரூபா)	8,039,952.15
எம்மால் தபால் திணைக்களத்திற்குக் கையளிக்கப்பட்டுள்ள பதிவுத் தபால்கள்	19,804
பதிவுத் தபால்களை தபாலில் இடுவதற்காக செலவான தொகை (ரூபா)	1,008,105

மூலம் : தபாற் கிளை

2.13 கணக்கீட்டுக் கிளை

2013 – நிதிச் செயற்பாட்டு அறிக்கை

செலவு தலைப்பின் கீழான செலவீனங்கள்	வருடாந்த ஒதுக்கீடு (ரூபா)	2013 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான செலவுகள் (ரூபா)
தனிப்பட்ட சம்பளங்களும் வேதனங்களும்	200,000,000.00	207,360,397.00
ஏனைய மீண்டெழும் செலவுகள்	1,788,550,000.00	1,806,667,133.00
மேலதிக ஒதுக்கீடுகள்	30,000,000.00	
மொத்த மீண்டெழும் செலவுகள்	2,018,550,000.00	2,014,027,530.00

செலவு தலைப்பின் கீழான செலவீனங்கள்	வருடாந்த ஒதுக்கீடு (ரூபா)	2013 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான செலவுகள் (ரூபா)
மூலதனச் செலவுகள்		
புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி வேலைகள்		
கட்டடங்களும் நிருமாணங்களும்	500,000.00	494,264.00
இயந்திர உபகரணங்கள்	2,500,000.00	2,495,361.00
வாகனங்கள்	4,000,000.00	3,996,727.00
மொத்தம்	7,000,000.00	6,986,352.00
மூலதன சொத்துக்களை உடமையாக்கிக் கொள்ளல்		
தளபாடங்களும் காரியாலய உபகரணங்களும்	1,000,000.00	1,000,000.00
பொறிகளும் இயந்திரங்களும்	1,700,000.00	1,689,099.00
மொத்தம்	2,700,000.00	2,689,099.00
மனிதவள அபிவிருத்தி		
ஆளனியிருக்கான பயிற்சி (அ)	3,000,000.00	699,720.00
மொத்தம்	3,000,000.00	699,720.00
வேறு மூலதனங்கள்		
அறிவை அடிப்படையாகக் கொண்ட பாடசாலைக் கல்வி முறைமையை புனரமைக்கும் வேலைத்திட்டம் (இலங்கை அரசு – உலக வங்கி	10,000,000.00	2,904,272.00
மொத்தம்	10,000,000.00	2,904,272.00
அபிவிருத்தி திட்டம் (2013 – 2014)		
கட்டடங்களும் நிருமாணங்களும்	6,000,000.00	3,224,993.00
தளபாடங்களும் காரியாலய உபகரணங்களும்	20,000,000.00	18,798,621.00
பொறிகளும் இயந்திரங்களும்	38,000,000.00	12,822,036.00
கட்டடங்களும் நிருமாணங்களும்	60,000,000.00	229,919.00
ஆளனியிருக்கான பயிற்சி (அ)	41,500,000.00	541,173.00
மொத்தம்	165,500,000.00	35,616,742.00
மூலதனத்தின் மொத்தக் கூட்டுத்தொகை	188,200,000.00	48,896,185.00
வருடாந்த வருமானம்	மதிப்பீடு	உண்மை வருமானம
பரீட்சைக் கட்டணங்களும் ஏனையவையும	165,000,000.00	156,306,619.00

செலவு தலைப்பின் கீழான செலவீனங்கள	வருடாந்த ஒதுக்கீடு (ரூபா)	2013 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான செலவுகள் (ரூபா)
அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு	வரையறை	2013.12.31 இல் உண்மைப் பெறுமதி
உச்ச வருமான வரையறை	19,000,000.00	16,374,978.00
குறைந்த செலவு வரையறை	14,000,000.00	17,071,090.033
உச்ச வருமான மீதி வரையறை	100,000,000.00	69,703,732.26

மூலம் : கணக்கீட்டு கிளை

2.14 வழங்கற் கிளை

அனைத்துப் பரீட்சைகளுக்கும் தேவையான அழிவுப் பொருட்களைக் கொள்வனவு செய்தலும் விநியோகித்தலும் மூலதனச் சொத்துக்களைக் கொள்வனவு செய்தலும் பராமரித்தலும் ஆகிய பணிகள் இக்கிளையினால் நிறைவேற்றப்படுகின்றன.

பிரதானமாக 2013 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (சா/தரம்), க.பொ.த. (உ/தரம்) மற்றும் 5 ஆம் தரம் புலமைப் பரிசில் பரீட்சை என்பவற்றோடு வேறு நிறுவனம்சார் பரீட்சைகள், ஆட்சேர்ப்புப் பரீட்சைகள் பலவற்றுக்கும் எவ்வித காலதாமதமுமின்றி அனைத்து காகிதாதிகளையும் பகிர்ந்தளிக்கப்பட்டது. இதன்கீழ் குறித்த பரீட்சைகளுக்குத் தேவையான விடை எழுதும் புத்தகங்கள், தாள்கள், Thermo Paper , கடித உறைகள், நூல், பசை ஆகிய அனைத்தையும் விநியோகிப்பதற்காகப் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்களைக் கோரி தொழில்நுட்ப மதிப்பீட்டு சபையின் சிபாரிசின்படி பொருட் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த வருடங்களில் அழிக்கப்பட வேண்டிய விடைத்தாள்கள், வினாத்தாள்கள் மற்றும் அப்புறப்படுத்த வேண்டிய இரகசிய தாள்கள் என்பன வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலைக்கு மீள்சுழற்சிக்காக அனுப்பப்படுகின்றன.

திணைக்களத்திற்கு உரித்தான சகல வாகனங்களையும் பராமரித்தல், கடமைத் தேவைப்பாடுகளுக்காக வாகனங்கள் வழங்கல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
வருடாந்த பொருட் பரிசீலனைச் சபை மூலம் கழித்தொதுக்கலுக்கான கழித்தொதுக்கல் சபையின் அனுமதியுடன் களஞ்சியசாலைக்கு பொறுப்பளிக்கப்பட்ட பொருட்களுக்கான விலைமனுக்களைக் கோரி கூடிய விலையை முன்வைத்த கொள்வனவாளர்களுக்கு விற்பனை செய்து உரிய பெறுமதிகள் அரச வருமானத்தில் செலவு வைக்கப்பட்டுள்ளன.

திணைக்களத்திற்கு உரித்தான ஒவ்வொரு கிளையிலும் உள்ள நிழற்பிரதி இயந்திரங்கள், கணினிகள் போன்ற அனைத்து இயந்திரங்களையும் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தலுக்குரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திணைக்களக் கட்டடங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புப் பணிகள் திணைக்கள உத்தியோகத்தர்களின் நலனோம்பலுக்காக சிற்றுண்டிச்சாலை, பாதுகாப்புக்காக பாதுகாப்புப் பிரிவு மற்றும் சுத்தம் பேணலுக்காக சுத்திகரிப்புப் பிரிவு என்பவற்றை நடாத்துவதற்குரிய பணிகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மூலம் - வழங்கல் கிளை

2.15 அச்சகம்

2.15.1 அச்சகம் (இரகசியம்)

அச்சிடப்பட்ட இரகசிய ஆவணங்கள்	எண்ணிக்கை
2013 க.பொ.த. (உ/தர)ப் பரீட்சைக்காக மூன்று மொழிகளிலும் அச்சிடப்பட்ட வினாத்தாள்கள் (புதிய/பழைய)	3,572,728
புத்தகங்களாக அச்சிடப்பட்ட வினாத்தாள்கள் (18 பாடங்களுக்கானது)	1,142,350
2013 க.பொ.த. (உ/தர)ப் பரீட்சை புவியியல் பாடத்திற்காக வெவ்வேறாக அச்சிடப்பட்ட வர்ணத் தேசப்படங்கள் (புதிய/பழைய)	55,550
2013 ஆம் ஆண்டின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்காக இரண்டு மொழிகளில் அச்சிடப்பட்ட வினாத்தாள்கள	698,000
2013 க.பொ.த. (சா/தர)ப் பரீட்சை 2013 இற்காக மூன்று மொழிகளிலும் அச்சிடப்பட்ட வினாத்தாள்கள்	7,442,000
2013 க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை புவியியல் பாடத்திற்காக அச்சிடப்பட்ட வர்ணத் தேசப்படங்கள்	113,500
இப் பரீட்சைக்காக வர்ண சித்திரங்களுடன் அச்சிடப்பட்ட வினாத்தாள்கள்	150,750
சித்திரக்கலை பாடத்திற்காக வர்ண சித்திரங்களுடன் அச்சிடப்பட்ட வினாத்தாள்கள	150,750
2013 க.பொ.த. (சா.தர)ப் பரீட்சைக்காக புத்தகங்களாக அச்சிடப்பட்ட வினாத்தாள்கள் (5 பாடங்களுக்கானது)	1,115,250

மூலம்: அச்சகம் (இரகசியம்)

2.15.2 அச்சகம் (இரகசியமல்லாத)

2013 – அச்சிடப்பட்ட வேறு எழுத்தாவணங்கள் (இரகசியமல்லாத)

	எண்ணிக்கை
பரீட்சைகளுக்குத் தேவையான நாட்குறிப்பேடுகள் மற்றும் அறிவுறுத்தல் கையேடுகள்	144,350
பல்வேறு பரீட்சைகளுக்கான சான்றிதழ்கள்	53,000
சான்றிதழ் கிளைக்காக அச்சிடப்பட்ட சான்றிதழ்கள்	102,250
பல்வகை ஒட்டிகள்	3,172,250
பல்வகைப் படிவங்கள்	3,848,600
பல்வகை கடிதத் தலைப்புக்கள்	6,500
கோவைகள்	6,196
உறைகள்	336,173
பெறுபேற்று அட்டவணைகள்/பெறுபேற்றுக் குறிப்புக்கள்	421,922
வேறு நானாவித அச்சிடல் பணிகள்	5,314,900

மூலம்: அச்சகம் (இரகசியமல்லாத)

2.16 கணினிக் கிளை

திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பாடசாலைப் பரீட்சைகள், கணனிமயப்படுத்தி நடாத்தப்படுகின்ற அனைத்து நிறுவனப் பரீட்சைகளுடனும் தொடர்புடைய கணினி நிகழ்ச்சிநிரல்களைத் தயாரித்தல், தரவுகளைத் தொகுத்தல், தரவு நிரற்படுத்தலுடன் தொடர்புடைய குறைபாட்டு அறிக்கைகளை வழங்குதல், பரீட்சை நிலையங்களின் பட்டியல்களை வழங்குதல், வினாத்தாள்கள் தொடர்பான புள்ளிவிபரங்களை வழங்குதல், பரீட்சை அனுமதி அட்டைகளை விநியோகித்தல், வரவுப் பதிவேடுகளை வழங்குதல், புள்ளிகளை நடைமுறைப் பயன்பாட்டுக்கு ஏற்றவாறு ஒழுங்குபடுத்தல், கணனிமயப்படுத்தப்பட்டுள்ள புள்ளிகளின் குறைபாட்டு பட்டியல்களை வழங்குதல், பரீட்சை நிலையங்கள் தொடர்பான ஒப்பிட்டு அறிக்கைகளை வழங்குதல், பெறுபேற்று அட்டவணைகள் மற்றும் தனிப்பட்ட பெறுபேற்று அட்டவணைகள் வழங்குதல், சான்றிதழ்களை அச்சுப் பதிப்பித்தல் என்பன இக்கிளையின் பிரதான பணிகளாகும். பரீட்சைகளுடன் தொடர்பான தரவுகளை களஞ்சியப்படுத்தலும் அவற்றைப் பாதுகாப்பாக வைத்திருத்தலும் இக்கிளையினால் மேற்கொள்ளப்படும் மற்றுமோர் முக்கிய பணியாகும். கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக பாடசாலை, வலய, மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலான அடைவு நிலமைகள் பற்றிய தரவுகள், பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு கிளையினதும் ஆய்வு அபிவிருத்தி கிளையினதும் தேவைக்கேற்ப அத்தகைய தரவுகளைப் பெற்றுக்கொடுத்தலும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் வினைத்திறனான கருமங்களுக்காக அந்நிறுவனங்களின் வேண்டுகோள்களுக்கேற்ப பரீட்சைகளுக்குரிய திறன்கள் பற்றிய விபரங்கள் மற்றும் பகுப்பாய்வு அறிக்கைகளை வழங்குதலும் இக்கிளையினால் செய்யப்படும் கருமங்களாகும்.

மூலம்: கணினிக் கிளை

2.17 தரவு நிரற்படுத்தும் கிளை

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் கணினி மயப்படுத்தப்பட்டு நடாத்தப்படுகின்ற அனைத்து பரீட்சைகளுடனும் தொடர்புடைய தரவுகளைப் பேணல், அவற்றில் ஏற்படுகின்ற மாற்றங்களைப் பதிவுசெய்தல், அப்பரீட்சைகளுக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் புள்ளிகளைப் பதிவுசெய்தல் என்பன இக்கிளையின் பணிகளாகும். பாடசாலை பரீட்சை ஒழுங்கமைப்பு மற்றும் பெறுபேறுகள் கிளை, மதிப்பீட்டு (பாடசாலை பரீட்சைகள்)கிளை , ஒழுங்கமைப்பு, வெளிநாட்டுப் பரீட்சைகள் மற்றும் பெறுபேறுகள் நிறுவனம்சார் பரீட்சைகள் கிளை ஆகியவற்றின் மூலம் தேவையான தகவல்கள் இக்கிளைக்கு வழங்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட கிளைகள் மூலமாக 2013ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அனைத்து கணினிமயப்படுத்தப்பட்ட பரீட்சைகளுடனும் தொடர்புடைய பணிகள் குறித்த காலப்பகுதியினுள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

மூலம்: தரவு நிரற்படுத்தும் கிளை

2.18 திட்டமிடல் கண்காணிப்புக் கிளை

01. பௌதிக வளத் தேவைகளைப் பூர்த்திசெய்தல்

இதன் மூலம் திணைக்களத்திற்குத் தேவையான கணினிகள், நிழற்பிரதி இயந்திரங்கள், கணினி அச்சியந்திரங்கள், அப்பல் கணினிகள், பல்லூடக எறியிகள் உள்ளிட்ட இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

02. புதிய பல்பணிக் கட்டடம் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்தின் அளவீட்டுப் பணிகள், அத்திபாரத்துக்கான மண் பரிசோதனை என்பன நிறைவு செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கிளையினதும் தேவைகளைக் கருத்திற்கொண்டு (நனெ ரளநச சநஙரசைநஅநவெள) அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தால் கட்டடத்தின் அடிப்படை உத்தேச மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அம்மதிப்பீட்டிற்கு அமைய ரூ 457.75 மில்லியன் செலவாகும் என்பதுடன் அபிவிருத்தி திட்டத்தினால் ரூ 280 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி ரூ 177.75 மில்லியன் மேலதிக ஒதுக்கீட்டுக்கான தேவை ஏற்பட்டுள்ளது. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் கட்டட நிர்மாணத்துக்கான ஆலோசனை சேவையை வழங்கிய அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்திற்கே புதிய கட்டட நிர்மானப் பணிகளைக் கையளிப்பதற்கும் ரூ 177.75 மில்லியன் மேலதிக ஒதுக்கீட்டை பெற்றுக்கொள்வதற்கும் 2013 ஜுலை மாதம் அமைச்சரவையின் அனுமதிக்கான கோரிக்கை விடுக்கப்பட்டது. இருப்பினும் மேலதிக ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்ளல் சாத்தியமற்றதெனக் கண்டறியப்பட்டமையினால் ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்ட பணத்திற்கேற்றவாறு திட்டமிடுவதற்காக அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்துடனான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

03. தகவல் தொழினுட்ப ஆலோசனை சேவையைப் பெற்றுக்கொள்ளல்.

இதற்காக கொழும்பு, மொரட்டுவ ஆகிய பல்கலைக்கழகங்களிலிருந்து ஆலோசனைகளும் விலைமனுக்களும் கோரப்பட்டதுடன் அவ் ஆலோசனைகளை கருத்திற்கொண்டு கொழும்பு பல்கலைக் கழகம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

04. பரீட்சைகளை நடாத்துவதற்கான நிர்வாக சபைகளைப் பயிற்றுவிப்பதற்கான பயிற்சிக் கையேடுகள் தயாரித்தல்

பயிற்சிக் கையேடுகளைத் தயாரிப்பதற்காக தெரிவுசெய்யப்பட்ட அதிகாரிகளுக்கு இலங்கை அபிவிருத்தி மற்றும் நிர்வாக நிறுவகத்தில் இரண்டு நாள் செயலமர்வொன்றை நடாத்தி ஏழு கையேடுகள் தயாரிக்கப்பட்டன.

05. பரீட்சைகளை நடாத்துவதற்கான நிர்வாகக்குழுக்களின் பயிற்சிக் குழுமம் ஆரம்பிக்கப்பட்டமை

பயிற்சிக் குழுமத்துக்கான உத்தியோகத்தர்களை தெரிவுசெய்வதற்கான அறிவித்தல், விண்ணப்பப்படிவங்கள் என்பன 2013ஆம் திகதிய தினமின, தினகரன், டெயிலி நிவுஸ் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டன. அதற்கேற்ப சுமார் 22000 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதுடன், அவற்றுள் மேல் மாகாணத்தின் 2000 பேருக்கான நேர்காணல்கள் நடாத்தி முடிக்கப்பட்டுள்ளன.

மூலம் : திட்டமிடல் மற்றும் கண்காணிப்புக்கிளை

03. புதிய விடயங்கள

3.1 இலங்கைப் பரீட்சைத் திணைக்கள வளாகத்தில் நிருமாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய பல்பணி கட்டட நிர்மாணப் பணிகளைத் திட்டமிடல

இதற்குத் தேவையான ஒதுக்கீடுகள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் அபிவிருத்தித் திட்டம் 2012 - 2014 இல் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அனைத்து திட்டங்களும் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன. மிக விரைவில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

3.2 பாடசாலைப் பரீட்சைகளுக்கான ஆலோசனை நிர்வாகச் சபையைத் தாபித்தல்

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பாகவும் அம்மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய பிரிவுகள் தொடர்பாக ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலும், பிரச்சினைகள் தோன்றும் சந்தர்ப்பங்களில் வழிகாட்டலும், பரீட்சைகள் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு தற்காலத்தை விட பரந்துபட்ட சேவை ஒன்றை மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் வழங்கக்கூடிய வகையான சூழலைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான உதவிகளைப் பெற்றுக்கொள்ளலும் நவீன தொழினுட்பப் பாவனையை பரீட்சைத் திணைக்களத்திலும் ஏற்படுத்துவதன் மூலம் வினைத்திறனும் வினைத்திறனும் கொண்ட வேலை-வயை வழங்குவதற்குத் தேவையான விழிகாட்டல்களைப் பெற்றுக்கொள்ளலும் இவ் ஆலோசனை நிர்வாக சபையைத் தாபித்ததன் பிரதான நோக்கங்களாகும்.

3.3 1968ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தில் சில பகுதிகளை திருத்துவதற்கான பணிகளை ஆரம்பித்தல்

பாடசாலைப் பரீட்சைகள் தொடர்பான ஆலோசனை நிர்வாகச் சபையின் கீழேயே செயற்படுகின்ற வகையில் பரீட்சைகள் சட்டத்தைத் திருத்தும் சபை தாபிக்கப்பட்டுள்ளது. பரீட்சைகள்சட்டத்திலுள்ள இங்கு கடந்த கால தேவைகளுக்கமைய ஒழுங்கமைக்கப்பட்ட சில விதிமுறைகளை நடைமுறைக்குப் பொருந்தும் வகையில் திருத்தப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதனால் அதற்குத் தேவையான பணிகள் 2013ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன், தற்போது அப்பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

3.4 திட்டமிடல் மற்றும் கண்காணிப்புக் கிளை தாபிக்கப்பட்டமை

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளை வினைத்திறன் மிக்கதாகவும் உயர் மட்டத்திலும் மேற்கொள்வதற்காக பௌதிக, மானிட விவளங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் திட்டமிடல் மற்றும் கண்காணிப்புக்கிளை 2013ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது.

3.5 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்பட்டமை

திணைக்களத்தினுள் நடைபெறுகின்ற நிதி நடவடிக்கைகளையும் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மிகச் சரியாகவும் நம்பகமாகவும் மேற்கொள்ளுவதற்காக திணைக்களத்தின் உள்ளக நிர்வாகத்திற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்கல் மற்றும் அவற்றின் பணிக-ளின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதற்காக தொடர் மற்றும் சுயாதீன மதிப்பீடொன்றை மேற்கொள்ளும் நோக்கத்துடன் 2013ஆம் ஆண்டில் உள்ளக கணக்காய்வுப் பிரிவு

3.6 சான்றிதழ்கள் பெற்றுக்கொள்வதற்கான ஒருநாள் சேவை

சான்றிதழ்கள் பெற்றுக்கொள்வதற்கான ஒருநாள் சேவை மூலமாக க.பொ.த. (சா.த), க.பொ.த. (உ.த), பொதுத் தகவல் தொழினுட்பம் ஆகிய பரீட்சைகளின் சான்றிதழ்களை இரண்டு மணித்தியால குறுகிய நேரத்துள் வழங்கக்கூடிய வகையில் உடனடி சேவையொன்றினை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோன்று பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற ஏனைய அனைத்து பரீட்சைகளின் சான்றிதழ்களையும் ஒருநாள் சேவையினூடாக பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் தேவையான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

3.7 புதிய இணையத்தளம் ஒன்றினை ஆரம்பித்தல்

பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற அனைத்து பரீட்சைகளினதும் பெறுபேறுகளை காலதாமதமின்றி பரீட்சார்த்திகளே நேரடியாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் புதிய இணையத்தளம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்மூலம் வெளிநபர்களின் இடைத்தொடர்பின்றி திணைக்களத்தினாலேயே உரிய தரவுகளை இணையத்தில் தரவேற்றம் (ருடழயன) செய்யும் ஆற்றல் கிடைத்துள்ளது. அதன்படி www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தின் மூலம் பரீட்சார்த்தி ஒருவருக்கு தனது பரீட்சைப் பெறுபேற்றினை பெற்றுக்கொள்ள முடியும்.

3.8 முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் கூட்டங்களை நடாத்துதல்

க.பொ.த. (சா.தர), க.பொ.த. (உ.தர)ப் பரீட்சைகளின் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்து தயாரிக்கப்படும் அறிக்கைகளை வலய மற்றும் மாகாண, கல்விக் காரியாலயங்களுக்கு வழங்குதல், அவற்றின் பகுப்பாய்வு அறிக்கைகளினூடாக அந்தந்த வலயத்தின் அல்லது மாகாணத்தின் கல்வித் தரம் தொடர்பாக சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகளுக்கு விளக்கமளிப்பதற்கான கருத்தரங்குகளை நடாத்துதல்.

3.9 பரீட்சைகளை நடாத்துதலும் பெறுபேறுகளை வெளியிடலும்

2013ஆம் ஆண்டின் பரீட்சைகளை ஒழுங்கமைத்தல், நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடும் பணிகளை ஒப்பீட்டளவில் மிக வெற்றிகரமாக நிறைவேற்றக்கூடியதாகவிருந்தது. அதன்போது அப்பணிகளை சரியாகவும், நம்பகத்தன்மையை பாதுகாக்கும் வகையிலும் காலதாமதமின்றியும் நடாத்த முடியுமாயிருந்ததுடன் மீள்மதிப்பீட்டுப் பெறுபேறுகளையும் மிகக் குறுகிய காலப்பகுதியினுள் வெளியிடக் கூடியதாகவிருந்தது.

3.10 விடைத்தாள் பரீட்சகர்களின் குழுமம் ஒன்றினை ஆரம்பித்தல்

திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற நிறுவனம்சார் பரீட்சைகளின் விடைத்தாள்களின் மதிப்பீட்டுப் பணிகளை முறைமைப்படுத்தும் நோக்கில் மதிப்பீட்டு (நிறுவனம்சார் பரீட்சைகள்) கிளையினூடாக விடைத்தாள் பரீட்சகர்களின் குழுமமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

அதற்கு மேலதிகமாக அனைத்து பாடசாலைப் பரீட்சைகளினதும் மதிப்பீட்டுப் பணிகளுக்காகவும் விடைத்தாள் பரீட்சகர்களின் குழுமம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனூடாக எதிர்காலங்களில் சரியான வழிகாட்டல், முறையான பயிற்சி என்பவற்றினூடாக விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் பரீட்சகர்களை ஈடுபடுத்த முடியும்.

3.11 பரீட்சை மேற்பார்வையாளர்களின் பயிற்சிக் குழுமம் ஒன்றினை ஆரம்பித்தல்

பரீட்சைகளை நடாத்தும் பணிகளின்போது அவற்றுடன் தொடர்புடைய சட்ட ரீதியான பரப்பு தொடர்பாகவும் ஏனைய சம்பிரதாயங்கள் தொடர்பாகவும் தெளிவான அறிவையும் பயிற்சியையும் பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு வழங்கும் நோக்கில், திட்டமிடல், கண்காணிப்புக் கிளையின்கீழ் செயற்படும் வகையில் பரீட்சை மேற்பார்வையாளர் குழுமம் ஆரம்பிக்கப்பட்டது. இதன்மூலம் பரீட்சை முறைகேடுகளையும் பரீட்சை சட்ட மீறல்களையும் இழிவளவாக்கிக்கொள்ள முடியும்.

Department of Examinations, Sri Lanka

Prepared to be tabled in the parliament as per Public Finance Circular No. 402

Administration Branch
Department of Examinations
Pelawatta, Battaramulla

Annual Performance Report - 2013

Department of Examinations

CURRICULUM
EVALUATION
TEACHING
LEARNING
N E T S

The message of the Commissioner General of Examinations,

I forwarded herewith the annual performance report - 2013, of Department of Examinations, Sri Lanka, which consists the information on overall progress of the functions of this department which bears the main responsibility of conducting school exams, recruitment exams, selection tests, promotion and efficiency bar exams, local and foreign institutional exams while safeguarding reliability and validity and releasing results.

Education provides a platform to anyone in the world to stand solidly. Accurate assessment and evaluation procedures are essential to this valuable phenomenon 'Education' and in Sri Lanka, Department of Examinations bears this responsibility. Our ultimate hope, target and objective is to fulfill this duty on behalf of children in the country equally, reliably and efficiently with no discrimination.

In order to materialize this objective many new methods were decided, planned and implemented during the year 2013.

Our expectation is to further provide guidance for the development of learning and teaching process while preserving the quality of education.

W.M.N.J. Pushpakumara
Commissioner General of Examinations,
Department of Examinations, Sri Lanka

Contents

01. Role and function of the Department of Examinations

1.1 Vision

1.2 Mission

1.3 Function of the Department of Examinations

02. Performance of each branch

Services related to school Exams

2.1 School exams organization and results branch

2.2 Confidential (School exams) branch

2.3 Evaluation (School exams) branch

2.4 Investigations branch

2.5 Certificates branch

2.6 Research and Development branch

Services related to Agency Functions

2.7 Organization and foreign exams branch

2.8 Confidential (Institutional exams) branch

